நாள் 08.08.2024

அசல் வழக்கு எண் 94/2018

வா சா 1 யுனைசி கிரேனா

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை தொடர்ச்சி

06.05.2010 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயருக்கு 2 ம் பிரதிவாதி ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 27.05.2011 தேதியிட்ட 4 ம் பிரதிவாதியின் கடித நகலுடன் 10.06.2011 தேதியிட்ட 4 ம் பிரதிவாதியின் கடிதம் வா.சா.ஆ.3 ஆகவும், 05.10.2010 தேதியிட்ட 4 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கடிதம் வாசா.ஆ.4 ஆகவும், 11.08.2011 தேதியிட்ட மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையின் WA(MD) 749/2011 தீர்ப்பு உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 25.06.2014 தேதியிட்ட தமிழ்நாடு தொடக்க கல்வி இணை இயக்குநர் மற்றும் மேல்முறையிட்டு அலுவலரின் செயல்முறைகள் அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 27.11.2020 தேதியிட்ட மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையின் WP(MD)10780/2014 ன் உத்தரவு உண்மை நகல் வா.சா.ஆ.7, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மாவட்டதொடக்க கல்வி அலுவலகத்திடமிருந்து நான் பெற்ற தகவல் வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை(party in person)**

நானும் 1, 2 பிரதிவாதிகளும் கிறிஸ்தவர்கள் என்றால் சரிதான். தற்போது நான் களக்காடு ஊரில் உள்ள பள்ளியில் நான் பணிபுரிந்து வருகிறேன் என்று சொன்னால் ஆமாம். தற்சமயம் 1 ம் பிரதிவாதியின் பள்ளிக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும இல்லை

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL210005132018/truecopy/order-2.pdf

என்று சொன்னால் சரியல்ல. அது என்னுடைய தாத்தாவுடைய உடைமை என்னுடைய பொருட்களும், சான்றிதழும் அந்த பள்ளியில் இருக்கிறது. நான் சொல்வதை போன்று என்னுடைய பொருட்களும் சான்றிதழும் 1ம் பிரதிவாதியின் பள்ளியில் இல்லை என்றும், 1ம் பிரதிவாதியின் பள்ளிக்கும் எனக்கும் சம்மந்தம் உண்டு என்பதை காட்ட என்னிடம் எந்த ஆவணமும கிடையாது என்று சொன்னால் சரியல்ல. ஆவணம் இருக்கிறது. சம்மந்தம் உண்டு என்பதை காட்ட எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல தாக்கல் செய்திருக்கிறேன். சாட்சி மறுபடியும் எனது வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன் என்று கூறினார். வா.சா.ஆ.8 தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நான் பெற்ற தகவல் 21.03.2016 ல் நான் அனுப்பியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இது மட்டுமல்ல வேறு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழும் நான் தகவல் கேட்டு கொடுத்திருக்கிறேன். எந்த வருடத்தில் இருந்து நான் அவ்வாறு தகவல் பெறுவதற்கு கடிதம் கொடுததிருக்கிறேன் என்றால் 2010 லிருந்து பிரச்சனை ஆரம்பத்தித்திலிருந்து நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பல ஆதாரங்களை நான் கேட்டு பெற்றிருக்கிறேன். தனியார்பள்ளி சட்டம் 1973 பிரிவு 31 ல் என்ன சொல்லப்பட்டுளளது என்று எனக்கு தெரியும் என்று சொன்னால் தபால் எழுதும் போது எனக்கு தெரியும் இப்பொழுது சரியாக ஞாபகமில்லை. நான் என்னுடைய வா.சா.ஆ.8 மனுவில் பிரிவு 31ன் படி பள்ளியின் சொத்துககள் உரிமை மாற்றம் செய்திட கல்வி துறை அலுவலர்களிடம் முன் அனுமதி பெறவேண்டுமா என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் தகவல் பெறுதவற்கு முன்பே மேற்படி தனியார் பள்ளி சட்டம் 1973 பிரிவு 31ன் கீழ் முன் அனுமதி

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL210005132018/truecopy/order-2.pdf

பெறவேண்டுமென்ற விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் திட்டமாக தெரியாததால் எழுத்து மூலமாக கேட்டுள்ளேன். வா.சா.ஆ.8 ல் எனக்கு அளிக்கப்பட்ட தகவலில் நகல் இணைக்கப்பட்டுளளது என்று குறிப்பு இருககிறது என்று சொன்னால் சரிதான். அந்த இணைப்பில் யாரால் வழங்கப்பட்டது என்பதை காட்ட கையொப்பமும் முத்திரையும் இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த இணைப்புகள் தகுந்த அலுவலரால் வழங்கப்படவில்லை என்றும் நாங்களாக அதை இணைத்துள்ளோம் என்று சொன்னால் தெரியவில்லை. நான் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையின் உத்தரவினை வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.7 ல் உள்ள உத்தரவு 1ம் பிரதிவாதி இணை இயக்குநர் உத்தரவிற்கு எதிராக தாககல் செய்த ரிட் மனுவின் உத்தரவின் நகல் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.7 நீதிமன்ற உத்தரவினை நான் முழுமையாக படித்து பார்த்திருக்கிறேனா என்றால் படித்திருக்கிறேன். தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.7 உத்தரவானது தாவா சொத்து சம்மந்தமாகவோ அல்லது 1ம் பிரதிவாதி நடத்தும் பள்ளி முகமை சம்மந்தப்பட்ட உத்தரவு கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பள்ளி சம்மந்தப்பட்டது தான். வா.சா.ஆ.7 உத்தரவு நானும், 1ம் பிரதிவாதியும் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையின் படி ஏற்பட்ட உத்தரவு என்று சொன்னால் முற்றிலும் தவறாகும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 உத்தரவில் after making submissions on merit the learned counsel for the appellant would submit that the following order may be passed as agreed by this parties என்று கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வேறு பள்ளியில் வேலை தந்தால் நான் செய்வேனா என்று

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL210005132018/truecopy/order-2.pdf

கேட்டதன் பேரில் நான் சம்மதம் தெரிவித்தேன். மற்றப்படி வேறு ஒன்றுமில்லை. மேற்படி வா.சாஆ.7 உத்தரவானது நீதிமன்றத்தால் இறுதியாக வழங்கப்பட்ட உத்தரவு இல்லை என்றும், இரண்டு பேரும் ஏற்படுத்திய சம்மதத்தின் பேரில் ஏற்பட்ட உத்தரவு என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. வா.சாஆ.7 ன் உத்தரவின் படி நான் 1ம் பிரதிவாதியின் பள்ளியிலிருந்து களக்காட்டில் உள்ள பள்ளிக்கு நான் மாற்றம் செய்யப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வேலை மட்டும தான் கொடுத்திருக்கிறார்கள். வா.சா.ஆ.7 உத்தரவின் படி 1ம் பிரதிவாதியால் முழுமையான பண பலன்கள் எதுவும் பெற்று வழங்கவில்லை. 2010 ம் ஆண்டு நான் 1ம் பிரதிவாதி பள்ளிக்கு ஒழுங்காக வரததாலும் பள்ளியில் தகராறு செய்ததாலும் என் மீது 1ம் பிரதிவாதியின் பள்ளி நிர்வாகம் தற்காலிக பணி நீக்க உத்தரவு வழங்கி குற்ற குறிப்பாணை கொடுத்தது என்று சொன்னால் கடிதம் அனுப்பியது உண்மை. அந்த குற்றசாட்டுகளை நான் மறுத்துள்ளேன். அனைத்தும் அவருடைய மனைவியை தலைமை ஆசிரியை ஆக்கவேண்டுமென்ற உள்நோக்கத்துடன் ஜோடிக்கப்பட்ட குற்ற சாட்டு ஆகும். 1ம் பிரதிவாதியின் பள்ளி நிர்வாகம் என்னை தற்காலிக பணி நீக்கம் செய்த பின்பும் நான் தலைமைய ஆசிரியை என்று சொல்லி தான் அலுவலக முத்திரையை பயன்படுத்தி பதில் எழுதினேன் என்று சொன்னால் சரிதான். அப்பொழுது நிர்வாக தாவா நிலுவையில் இருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் கடிதமானது அந்த சமயத்தில் நான் கையெழுதது போட்டு 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கடிதம் என்று சொன்னால் சரிதான் அந்த கடிதம் **பிசா.ஆ.1.** பி.சா.ஆ.1 கடிதத்தினை பள்ளி நிர்வாகிக்கு அனுப்பாமல் நான் 1ம் பிரதிவாதியின் பெயரில் வழக்கறிஞர் என்று குறிப்பிட்டு அனுப்பியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL210005132018/truecopy/order-2.pdf

அந்த குறிப்பிட்ட காலத்தில் அவர் பள்ளி நிர்வாகியாக இல்லை. மேற்படி பி.சா.ஆ.1 கடிதத்தில் கல்வி அலுவலர்களின் முன் அனுமதியின்றி இடைநீக்கம் பணிநீக்கம் செய்யஇயலாது என்றும் ஒவ்வொரு வருடமும் கல்வி அலுவலர்களுக்கு சொத்து விவர அறிக்கை அனுப்பவேண்டுமென்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.1ன் விதிகளின் பிரகாரம் பள்ளிகல்வி இயக்குநர் அல்லது தகுதி வாய்ந்த கல்வி அலுவலரின் முன்அனுமதியில்லாமல் கல்வி நிறுவனங்களில் அசையும் மற்றும் அசையா சொத்துககளை உரிமை மாற்றம் செய்ய இயலாது என நான் கடிதத்தில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு கல்வி முகமையையும் சொத்துக்களையும் முன் அனுமதி பெறாமல் எழுதிவிட்டார் என்று தான் நான் பி.சா.ஆ.1 ல் கூறியுள்ளேன் என்று சொன்னால் முகமையை மாற்றியது எனக்கு தெரியும் சொத்துக்களை மாற்றியது அப்பொழுது எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1 கடிதத்தில் நான் எதற்காக முன் அனுமதி பெறாமல் சொத்துககளை மாற்ற முடியாது என சொன்னேன் என்பதற்கு காரணம் சொல்ல முடியுமா என்று சொன்னால் அரசு ஆணையை படித்து தெரிந்து கொண்டதை வைத்து அவ்வாறு சொல்லியிருக்கிறேன். 1ம் பிரதிவாதி பள்ளி முகமையை மாற்றுவதற்காக WP No.13086/2010 என்ற நீதிப்பேராணை மனுவினை தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த நீதிப்பேராணை மனுவில் உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால் சொத்தில் உரிமை இருக்கும் பட்சத்தில் உரிமை நீதிமன்றத்திற்கு சென்று வழக்கு தாக்கல் செய்ய கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு ஒரு வழக்கு நடந்தது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் தான் நாங்கள் உரிமையியல் நீதிமன்றத்தில்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL210005132018/truecopy/order-2.pdf

வழக்கு தாக்கல் செய்கிறோம் என்று வழக்குரையில் சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த உத்தரவை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். மேற்படி நீதிப்பேராணை உத்தரவில் It is needless to say that the third respondent, if she has got any right in respect of the school or the properties, it is open to her to approach the competent civil court. If the third respondent approaches the civil court, the civil court is directed to dispose of the matter uninfluenced by any order passed by this court என்று கண்டுள்ளது என்றால் தற்காலிகமாக அவ்வாறு சொல்லியுள்ளார்கள். மேற்படி உத்தரவு **பி.சா.ஆ.2**

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

www.ecourtsindia.com
This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTL210005132018/truecopy/order-2.pdf